Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 6, No.1, 2025, (8-14)

# சுயஅறிதிறன் கோட்பாட்டின் வழி படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துதல் பற்றிய ஓர் ஆய்வு

# Improving Fiction Writing Skills Among Form Two Students Using Metacognitive Theory

**Kuganeswary Shanmuga Sundram**
Faculty of Languages and Communication
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia

d20211100694@siswa.upsi.edu.my

**Corresponding author: Kuganeswary Shanmuga Sundram*

**Received:** 10 Oct 2024; **Revised:** 06 Apr 2025; **Accepted:** 15 Apr 2025; **Published:** 25 April 2025

**To cite this article (APA):** Shanmuga Sundram, K. . (2025). சுயஅறிதிறன் கோட்பாட்டின் வழி படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துதல் பற்றிய ஓர் ஆய்வு: Improving Fiction Writing Skills Among Form Two Students Using Metacognitive Theory. *Journal of Valartamil, 6*(1), 8-14. https://doi.org/10.37134/jvt.vol6.1.2.2025

**Abstract:** This study explored the enhancement of Form 2 students' creative essay-writing skills through the application of metacognitive theory. To identify challenges faced by students in writing creative essays, methods such as pre-tests, observation, reflective questionnaires, and interviews were employed. The pre-tests revealed key difficulties such as idea generation, language usage, imagination, structure, and a lack of confidence. Subsequently, five stages of interventions were designed and implemented, based on the core principles of metacognitive theory: planning, monitoring, and evaluation. Post-intervention assessments demonstrated significant improvement in students' essay-writing abilities. The application of metacognitive strategies effectively enhanced students’ creativity, clarity, and self-assurance in crafting imaginative essays. Teachers also benefited from this study as the metacognitive approach provided a structured framework to facilitate learning and teaching processes. Overall, the study contributed valuable insights into enhancing creative writing skills in the Malaysian Tamil language curriculum, showcasing metacognitive theory as a practical and impactful tool.

**Keyword:** Form 2 students', essay-writing, creative essays, creativity, clarity, self-assurance

**சுருக்கம்:** மெட்டாகாக்னிட்டிவ் கோட்பாட்டைப் பயன்படுத்துவதன் மூலம் படிவம் 2 மாணவர்களின் படைப்பு கட்டுரை எழுதும் திறன்களை மேம்படுத்துவதை இந்த ஆய்வு ஆராய்ந்தது. படைப்பு கட்டுரைகளை எழுதுவதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளம் காண, முன்-தேர்வுகள், கவனிப்பு, பிரதிபலிப்பு கேள்வித்தாள்கள் மற்றும் நேர்காணல்கள் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டன. முன்-தேர்வுகள் யோசனை உருவாக்கம், மொழி பயன்பாடு, கற்பனை, கட்டமைப்பு மற்றும் நம்பிக்கையின்மை போன்ற முக்கிய சிரமங்களை வெளிப்படுத்தின. அதைத் தொடர்ந்து, மெட்டாகாக்னிட்டிவ் கோட்பாட்டின் முக்கிய கொள்கைகளான திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில்

ஐந்து நிலை தலையீடுகள் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. தலையீட்டிற்குப் பிந்தைய மதிப்பீடுகள் மாணவர்களின் கட்டுரை எழுதும் திறன்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டின. மெட்டாகாக்னிட்டிவ் உத்திகளைப் பயன்படுத்துவது கற்பனை கட்டுரைகளை உருவாக்குவதில் மாணவர்களின் படைப்பாற்றல், தெளிவு மற்றும் தன்னம்பிக்கையை திறம்பட மேம்படுத்தியது. கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறைகளை எளிதாக்குவதற்கு மெட்டாகாக்னிட்டிவ் அணுகுமுறை ஒரு கட்டமைக்கப்பட்ட கட்டமைப்பை வழங்கியதால் ஆசிரியர்களும் இந்த ஆய்விலிருந்து பயனடைந்தனர். ஒட்டுமொத்தமாக, மலேசிய தமிழ் மொழி பாடத்திட்டத்தில் படைப்பு எழுத்துத் திறன்களை மேம்படுத்துவதில் மதிப்புமிக்க நுண்ணறிவுகளை இந்த ஆய்வு பங்களித்தது, மெட்டாகாக்னிட்டிவ் கோட்பாட்டை ஒரு நடைமுறை மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் கருவியாகக் காட்டுகிறது.

**முக்கிய வார்த்தை:** படிவம் 2 மாணவர்களின், கட்டுரை எழுதுதல், படைப்பு கட்டுரைகள், படைப்பாற்றல், தெளிவு, தன்னம்பிக்கை

## முன்னுரை

மொழி என்பது ஒரு மனிதனின் சிந்தனை ஆற்றலை வளப்படுத்த உதவும் ஒரு வகை கருவியாகும். மேலும், சுப்ரமணியம் மற்றும் வெங்கடாசலம் (2021) என்பவர்கள் மொழி மாந்தனின் தொடர்பு ஊடகமாக விளங்கி அவனுடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும் வெளியிடுவதற்கு உதவுகிறது என்று கூறியுள்ளனர். இதனால் தான் மலேசிய கல்வி அமைச்சு மாணவர்களின் சிந்தனை ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்தில் மலேசியா கலைத்திட்டத்தில் தமிழ்மொழி பாடத்தை நான்கு முக்கிய அடிப்படைத் திறனான கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்துக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. சித்ரா செல்வி, துளசி, மணியரசன் (2022) என்பவர்கள் ஆரம்ப பள்ளியின் கற்றல் கற்பித்தலில் 30% முதல் 60% நேரம் எழுத்துத் திறனுக்கேச் செலவிடப்படுகிறது எனவும் இத்திறனில் ஆளுமைப் பெற மாணவர்களைக் குழந்தைப் பருவத்திலிருந்தே தயார் செய்தல் அவசியமானது என்று கூறியுள்ளனர். மொழித்திறனில் எழுத்துத் திறன் மாணவர்களின் சிந்தனைத் திறனை மேம்படுத்த உதவும் ஒரு முக்கியமான கருவியாகப் பார்க்கப்படுகிறது. சிந்தனைத் திறன் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை ஆக்கச் சிந்தனை மற்றும் ஆய்வு சிந்தனையாகும். பள்ளிச் சூழல் ஆக்கச் சிந்தனைக்கு மிகவும் பொருத்தமான ஒன்றாகப் பார்க்கப் படுவதாக முஸ்தபா மற்றும் பிர்சென் (2019) என்பவர்கள் கூறியுள்ளார். ஆக்கச் சிந்தனையில் ஒன்றாகக் கற்பனை ஆற்றல் பார்க்கப்படுகிறது. வாலெட் மற்றும் ரொபேர்ட் (1983) என்பவர்கள் கற்பனை ஆற்றல் என்பது புலன்களுக்குத் தெரியாதக் குணங்கள், பொருள்கள், சூழ்நிலைகள், உறவுகள் போன்றவற்றின் மன உருவகத்தை உருவாக்கும் திறன் என்று கூறியுள்ளனர்.

டெமிர் (2013) என்பவர் கற்பனைக் கட்டுரை என்பது ஏற்கனவே உள்ள தகவல்கள், கருத்துகள், நிகழ்வுகள், நினைவகத்தில் உள்ள ஒலிகள், படங்கள், வாசனைகள், உணர்வுகள் மற்றும் கனவுகள் ஆகியவற்றைக் கட்டுரை வழி கொண்டு சேர்பது என்று குறிபிட்டுள்ளார். கற்பனைக் கட்டுரையை எழுதுவதற்கென சில வரைமுறைகள் உள்ளது. மாணவர்களின் கற்பனைக்

கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்த நிறைய முறைகள் உள்ளன. அதில், சுய அறிதிறன் கோட்பாட்டின் வழி மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்த முடியும். சுய அறிதிறன் கோட்பாடு என்பது செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு, புரிந்துகொள்ளுதல், பணி செயல்திறன், கண்காணிப்புச் செயல்முறைகள் மற்றும் உத்திகளின் செயல்திறனை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருவரின் அறிவாற்றலைக் கண்காணிக்கும் ஒழுங்குமுறையாகும் என எமிலி (2011) என்பவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், சுய அறிதிறன் கோட்பாடு என்பது தற்போதைய அறிவாற்றலைக் கண்காணிப்பதில் ஒரு நபர் பயன்படுத்தும் செயல்முறைகளின் தொகுப்பைக் குறிக்கிறது, இதனால் அவரது சொந்த நடத்தையை திறம்பட காண முடிகிறது என்று மேதியு (2019) கூறியுள்ளார். ஆகவே, சுயஅறிதிறன் கோட்பாடு படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வில் உள்ள முதல் இயலானது ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு நன்மைகள், ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றாதாரம், கலைச்சொல் விளக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

## ஆய்வுப் பின்னணி

மலேசிய தமிழ்க்கல்வி வரலாற்றின் படி தொடக்கக் காலத்தில் தமிழ்மொழி பாடத்திற்கு என கலைத்திட்டம் உருவாக்கப்படவில்லை. 1988 ஆம் ஆண்டிலே இடைநிலைப்பள்ளி தமிழ்மொழிக்கான முறையான கலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கலைத்திட்டத்தில் அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது எழுத்துத் திறன் கொண்டு அமைப்பட்டுள்ளது.

எழுத்து திறன் என்பது மனித சிந்தனைத் திறன் மேம்பாட்டிற்கு அத்தியாவசியமானதாகும். இது ஒரு நபரின் சிந்தனைகள், உணர்வுகள் மற்றும் அறிவுகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் மிக முக்கியமான வழிமுறை ஆகும். எழுத்துத் திறன் தான் பேசும் தகவல்களைத் தெளிவாகவும், துல்லியமாகவும் வெளிப்படுத்த உதவுகிறது. இது படிக்கின்ற அனைவரின் மனதில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எழுதுதல் என்பது சிக்கலான மொழித்திறன்களில் ஒன்றாகும், ஏனெனில் இது எழுதும் நுட்பங்கள் மற்றும் மொழித் திறன்களை உள்ளடக்கியது என்று சுசியானா விஜிரஹாயு, அட்ஜி சபுத்ரா சுதிவான் (2023) என்பவர்கள் கூறியுள்ளனர். திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மூலம் கற்றல் செயல்பாட்டில் ஒருவரின் அறிவாற்றல் நடவடிக்கைகளை ஒழுங்குப் படுத்த முடியும். இக்கோட்பாட்டு கற்பனைக் கட்டுரையைக் கற்பிப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, ஆய்வாளர் படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்த சுயஅறிதிறன் கோட்பாடு மாதிரியைப் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தலை மேற்கொண்டுள்ளார்.

## ஆய்வுச் சிக்கல்

இடைநிலைப்பள்ளி மாணவர்கள் எழுத்துத் திறனில் அதிகமான சிக்கலை எதிர்நோக்குவது கண்டறிய முடிகிறது. அதிலும் படிவம் இரண்டு மாணவர்களிடையே கட்டுரை எழுதும் திறனில் அதிகமான சிக்கல் ஏற்படுவது அறிய முடிந்தது. புல்கியா, எஸ்., மஹ்பூப், எம்., & நுக்ரஹேனி, டி. ஏ. (2021) என்பவர்கள் தலைப்பின் மீது நம்பிக்கையின்மை போன்ற பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சினைகள் மாணவர்களின் எழுத்து திறனில் ஈடுப்பாட்டைத் தடுக்கின்றன, இது மோசமான கட்டுரைத் தரத்திற்கு வழிவகுக்கிறது. கற்பனைக் கட்டுரை எழுதுதல் என்பது மாணவர்களின் படைப்புத் திறனை வளர்க்கும் ஒரு முக்கியமான கல்வி நடவடிக்கை. இருப்பினும், பல மாணவர்கள் கருத்துருவாக்கம், மொழிப் பயன்பாடு, கற்பனைத் திறன், கட்டுமானம் மற்றும் தன்னம்பிக்கை இழப்பு போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். , மாணவர்கள் கற்பனைக் கதைகளுக்குப் பொருத்தமான கருத்துகளைத் தேர்ந்தெடுப்பதில் சிரமப்படுவதாகவும், கதாபாத்திரங்களை வளர்ப்பதில் குறைபாடுகள் இருப்பதாகவும் ராஜேந்திரன் (2010) தனது ஆய்வில் கண்டறிந்துள்ளார்.மாணவர்கள் கற்பனைக் கட்டுரைகளில் மொழிப் பயன்பாட்டில் குறைபாடுகள் இருப்பதாகவும், சொற்களஞ்சியம் குறைவாக இருப்பதாகவும் சந்திரமோகன் (2015) தனது ஆய்வில், கண்டறிந்துள்ளார். மேலும், ஆய்வில், மாணவர்களின் கற்பனைத் திறன் குறைவாக இருப்பதால், புதிய கதைகளை உருவாக்க முடியாமல் தவிப்பதாகவும், பழைய கதைகளை மறுபிரதியெடுப்பதாகவும் என லதா (2018) கண்டறிந்துள்ளார். மாணவர்கள் கதையின் கட்டமைப்பைப் பின்பற்றாமல், கதையைத் தொடர்ச்சியாக எழுத முடியாமல் தவிப்பதாகவும், கதையின் முடிவு திடீரென முடிவதாகவும் ராமச்சந்திரன் (2012) என்பவர் கண்டறிந்துள்ளார். மாணவர்கள் தங்கள் எழுத்துத் திறன் குறித்து தன்னம்பிக்கை இழந்து, எழுதும் செயல்பாட்டில் ஈடுபடாமல் இருப்பதாகவும், எழுதும் பயம் இருப்பதாகவும் கிருஷ்ணமூர்த்தி (2017) தனது ஆய்வில்,குறிப்பிட்டுள்ளார். இதே போல், கருத்துக்களை சரியான முறையில் மாற்றுவதிலும் கட்டுரையைச் சரியான கட்டமைப்புடன் அமைபதிலும் மாணவர்கள் சிக்கலை எதிர்நோக்குவதாக குறிப்பிட்டுள்ளனர்.

## ஆய்வு நோக்கம்

ஆய்வு இரண்டு நோக்கங்கள் அடைவதைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை,

I. இரண்டாம் படிவ மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதுவதில் ஏற்படும் சிக்கல்களைக் கண்டறிதல்.

II. சுய அறிதிறன் கோட்பாட்டின் வழி படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துதல்.

**வினா**

வினா 1: I. படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறன் எவ்வாறு உள்ளது?

இந்த ஆய்வில் ஆய்வாளர் முன்னறி தேர்வு வாயிலாக மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுதும் திறனில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிந்தார். கற்பனைக் கட்டுரை எழுதும் திறனில் மாணவர்கள் சில சிக்கல்களை எதிர் நோக்கியிருப்பதை முன் வைத்துள்ளார்.

இந்தத் தரமானது மாணவர்கள் கட்டுரைக் கட்டமைப்பு, தலைப்பையொட்டிய புரிதல், பொதுமான கருத்துகள், எழுத்துப் பிழைகள், வாக்கிய அமைப்பு முறை, சரியான இலக்கண பயன்பாடு என உற்று நோக்கப்பட்டுப் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த முன்னறி தேர்வில் ஐந்து மாணவர்கள் சிறந்த முறையில் கட்டுரையினை எழுதி A தரமான (25-30) புள்ளிகளை பெற்றுள்ளனர். மேலும், ஐந்து மாணவர்கள் எழுத்துப் பிழைகள், வாக்கிய அமைப்பு முறை, இலக்கண பயன்பாடு போன்ற கூறுகளில் சிறு சிறு தவறுகளைச் செய்து B தரமான ( 20- 24)புள்ளிகளைப் பெற்றுள்ளனர். அதனைத் தொடர்ந்து, நான்கு மாணவர்கள் அனைத்துக் கூறுகளிலும் தவறுகள் செய்திருப்பதால் C தரமான (15- 19) புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இறுதியாக ஆறு மாணவர்கள் அனைத்து கூறுகளிலும் அதிகமான தவறுகள் செய்து கடைநிலையான D (7-14 ) புள்ளிகள் கொண்ட தரத்தைப் பெற்றுள்ளனர்.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், மாணவர்கள் தங்கள் எழுத்துக் கலையில் பல்வேறு சவால்களை எதிர்கொள்வது தெரியவந்துள்ளது. குறிப்பாக, 14 மாணவர்கள் இலக்கணப் பிழைகளைச் செய்துள்ளனர். இதையடுத்து, 12 மாணவர்கள் தலைப்பைப் பற்றிய போதுமான அறிவு இல்லாமல் எழுதியுள்ளனர். மேலும், 8 மாணவர்கள் வாக்கிய அமைப்பில் பிழைகள் செய்துள்ளனர். குறைந்த எண்ணிக்கையிலான 4 மாணவர்கள் மட்டுமே கட்டுரை அமைப்பை சரியாகப் பின்பற்றியுள்ளனர். இந்த ஆய்வு முடிவுகள், மாணவர்களுக்கு எழுத்துக் கலை பயிற்சி அவசியம் என்பதை வலியுறுத்துகின்றன.

அதனைத் தொடர்ந்து, மாணவர்கள் கட்டுரை அமைக்கும் முறையில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர் என்பது இந்த ஆய்வின் வழி கண்டறியப்பட்டுள்ளது. மாணவர்கள் கட்டுரையைப் பத்தி வடிவில் சரியாக எழுதினாலும் ஒரு கருத்தை பத்தியில் எழுதும் வரைமுறையைப் பின்பற்ற தவருகின்றனர். மாணவர்கள் ஒரு கருத்தைப் பேசி முடிபதற்குள் மற்றொரு கருத்தைத் தொடங்குவதே இதற்கு முக்கிய காரணமாகும். இதனால் கட்டுரையைப் படிக்கும் பொழுது குழப்பத்தை ஏற்படுத்துகிறது. மேலும் சிலர் ஒரு பத்தியில் ஒரு கருத்தை எழுதியிருந்தாலும் அதனை தெளிவாக விவரிப்பதில் சிக்கலை எதிர் நோக்குகின்றனர்.

அதனைத் தொடர்ந்து, 8 மாணவர்கள் வாக்கியப் பிழை சிக்கலை எதிர்நோக்குகின்றனர் என்பது இந்த ஆய்வின் வழி அறிய முடிந்தது. ஆய்வாளர் மாணவர்களின் முன்னறி தேர்வை மதிப்பீடு செய்யும் பொழுது நிறைய எழுவாய் பயனிலைப் பிழைகளைக் கண்டறிந்துள்ளார். மேலும்,

மாணவர்கள் பயனிலையை எழுதும் பொழுது காலத்தைச் சரியாக கையாலுவது இல்லை. இதனால் அந்த வாக்கியம் எந்த காலத்தைக் குறிக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதில் சிக்கல் ஏற்படுகிறது. சில மாணவர்களுக்குக் கற்பனைக் கட்டுரை எந்த காலத்தைக் கொண்டு எழுதுவது என்பதில் குழப்பம் இருக்கிறது. இதனால் தான் காலம் பயன்பாட்டில் பிழை ஏற்படுகின்றது என்பதை ஆய்வாளர் உறுதி படுத்தியுள்ளார்.

மேலும், மாணவர்கள் கற்பனைக் கட்டுரை எழுதும் பொழுது இலக்கண பிழையிலும் சிக்கலை எதிர் நோக்கியுள்ளனர். சுமார் 14 மாணவிகள் அதிகமான இலக்கணப் பிழை செய்துள்ளனர். இலக்கணப் பிழை என்று பார்த்தால் மாணவர்கள் அதிகமாக ஒற்றுப் பிழையே செய்கின்றனர். ஒற்றுப்பிழைகள் பல காரணங்களால் ஏற்படுகின்றன. முதலாவதாக, ஒற்று விதிகளை நன்கு அறியாததால், எங்கு ஒற்று சேர்க்க வேண்டும், எங்கு சேர்க்கக் கூடாது என்பது தெளிவாக இல்லாமல் பிழைகள் நிகழ்கின்றன. இரண்டாவதாக, விரைந்து எழுதும் போது ஒற்றுக்களை மறந்துவிடுவதால் ஒற்றுப்பிழைகள் ஏற்படுகின்றன. மூன்றாவதாக, வேறு மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்பதின்போது, ஒற்று விதிகளை கவனிக்காமல் இருப்பதால் ஒற்றுப்பிழைகள் ஏற்படுகின்றன. இந்த ஆய்வின் அடிப்படையில் மாணவர்களுக்கு ஏற்படும் ஒற்றுப்பிழை அதிகமாக ஒற்றுப்பிழையின் விதிகளை அறியாமல் இருப்பதாலே நிகழ்கிறது.

**முடிவு**

முந்தைய ஆய்வுகளின் வழி பார்க்கும் போது கருத்து விளக்கக் கட்டுரைத் தொடர்பான ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. இருப்பினும், ஆய்வாளர் தமது முயற்சியில் இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளார். பொதுவாக பார்க்கும்போது, மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை என்பது கடினமான ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. அதனைக் கருத்தில் கொண்டு தொடர் ஆய்வுகள் யாவும் வேறு கோணத்தில் மேற்கொண்டால் சிறப்பாக இருக்கும் என ஆய்வாளர் தான் கருத்தை முன் வைத்துள்ளார்.

முதலில் இந்த ஆய்வானது மாணவர்களை மட்டுமே மையமாக கொண்டு படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் மாணவர்கள் எதிர்நோக்கிய சிக்கல் அதற்கான தீர்வுகளே உள்ளன. எனவே, தொடர் ஆய்வானது கற்பனைக் கட்டுரைகளைக் கற்பிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சிக்கலைக் கண்டறிந்து தீர்வு காணப்பட வேண்டும் என்பது ஆய்வாளரின் பரிந்துரையாகும். இவ்வாறான ஆய்வினை மேற்கொள்வதனால் ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலை சுலபமாக கையாள முடியும்.

அதனைத் தொடர்ந்து, “Creative Writing Padegogy” எனப்படும் படைப்பு எழுத்துக் கற்பித்தல் கோட்பாட்டினைக் கொண்டு கற்பனை கட்டுரையைக் கற்பித்தல் என்னும் தலைப்பில் இனி வரும் ஆய்வாளர்கள் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். படைப்பு எழுத்துக் கற்பித்தல் கோட்பாடு ‘பீட்டர் எல்போ’ அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கோட்பாடானது படைப்பாற்றல் செயல்முறையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்தக் கோட்பாட்டினைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் எவ்வாறு கற்பனைக் கட்டுரையை சிறந்த முறையைக் கற்றுக் கொள்ளலாம். ஆக, இது போன்ற கோட்பாட்டினைக் கொண்டு ஆய்வாளர்கள் ஓர் ஆய்வினை மேற்கொள்வது

கற்பனைக் கட்டுரை எழுதும் திறனையொட்டிய அறிவை மேம்படுத்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எளிதாக இருக்கும்.

## REFERENCES

Flavell, J. H. (1971). Metamemory and cognitive monitoring: A new area of cognitive-developmental inquiry. American Psychologist, 34(10), 906–911.

Vallet & Robert (1983). "Creative imagination involves creating mental representations of unseen properties, objects, conditions, and relationships"